பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு தலைமையில் 10 கருணை இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப்பொருட்கள், மருந்து, மாத்திரைகள், பீரோ, தையல் இயந்திரம், மாற்றுத்திறனாளி சைக்கிள், குக்கர் போன்ற அத்தியாவசிய பொருட்களை தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்.

நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பரமத்திவேலூர் தொகுதி சார்பு அணி தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் பரமத்திவேலூர் தொகுதி அலுவலகம், கலைஞர் அரங்கில் மாவட்ட கழக செயலாளர்எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் சாந்தி அவர்கள் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் பேசுகையில் தொகுதிக்குட்பட்ட ஒவ்வொரு பகுதி வாரியாக உள்ள சார்பு அணியினரிடம் கட்சியின் செயல்பாடுகள் குறித்தும், எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதியை வெற்றி பெறச்செய்ய அந்தந்த பகுதி நிர்வாகிகள் வீடுகள் தோறும் திண்ணைப் பிரச்சாரங்களில் ஈடுபட வேண்டும் எனவும், முதல்வரின் சிறப்புத்திட்டங்களான மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், இல்லம் தேடி கல்வி, காலை உணவுத்திட்டம், கலைஞரின் கனவு இல்லம் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி திறம்பட செயலாற்ற வேண்டும். மேலும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியதைப் போல் சார்பு அணி நிர்வாகிகள் தங்களின் கடமைகளை உணர்ந்து தி.மு.க வெற்றிக்கு திறம்பட செயலாற்ற வேண்டும் எனக் கூறினார். இக்கூட்டத்தில் மாவட்ட சார்பு அணி தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

உத்திரமேரூர் தொகுதி தினையாம்பூண்டி ஊராட்சியில்

கூட்டுறவு பால் உற்பத்தி நிலையம் - மகளிர் சுய உதவிக் குழுக் கட்டிடம்!

க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்! கெ.ஞானசேகரன் பங்கேற்பு!

காஞ்சிபுரம், அக். 8 -

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதி தினையாம்பூண்டி ஊராட்சியில் தாட்கோ மூலமாக கூட்டுறவு பால் உற்பத்தி நிலையத்தை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. நேற்று திறந்து வைத்தார். இதில் ஒன்றியச் செயலாளர் கெ. ஞானசேகரன் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், தினையாம்பூண்டி ஊராட்சியில் தாட்கோ மூலமாக கூட்டுறவு பால் உற்பத்தி நிலையம் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று (7.10.2024) காலை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தாட்கோ மேலாளர் ராஜ சுதா தலைமை தாங்கினார்.

ஒன்றிய செயலாளர் கெ. ஞானசேகரன், கூட்டுறவு பால் உற்பத்தி துணை பதிவாளர் சித்ரா, சார்பதிவாளர் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை விகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் சரஸ்வதி பெருமாள் அனைவரையும் வரவேற்றார்.

அதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கூட்டுறவு பால் உற்பத்தி சங்கத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பால் உற்பத்தியை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலமாக ரூபாய் 74 லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட மகளிர் சுய உதவி குழு கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் இரா. நாகன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் எஸ். சசிகுமார், துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜ், மாவட்ட கவுன்சிலர் பத்மா பாபு, அவைத்தலைவர் சுப்பராயன், கவுன்சிலர் அண்ணாதுரை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தனஞ்செழியன் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின்

ஐந்தாம் கட்டப் பயணம் திருத்தணியில் தொடங்கியது!

1,008 மூத்த குடிமக்கள் பயன்பெற்றுள்ளனர்!

சென்னை, அக்.8-

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் ஐந்தாம் கட்டப் பயணத்தில் பங்கேற்ற 195 மூத்த குடிமக்கள் திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சுவாமி தரிசனம் செய்து பழனிக்கு புறப்பட்டனர்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகியவற்றிற்கு ஆன்மிகப் பயணம் சென்று வருபவர்களுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கப்பட்டும், ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோயில்களுக்கும், இராமேசுவரத்திலிருந்து காசிக்கும், அறுபடை வீடுகளுக்கும் மூத்த குடிமக்கள் ஆன்மிகப் பயணமாக கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.

தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப் பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளுக்கு 1,000 மூத்த குடிமக்களை கட்டணமில்லாமல் அழைத்து செல்ல திட்டமிடப்பட்டு முதற்கட்டப் பயணம் சென்னை, கந்தக்கோட்டத்திலிருந்தும், இரண்டாம் கட்டப் பயணம் பழனியிலிருந்தும், மூன்றாம் கட்டப் பயணம் திருச்செந்தூரிலிருந்தும், நான்காம் கட்டப் பயணம் சுவாமிமலையிலிருந்தும் புறப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, கடலூர், சேலம், விழுப்புரம், சென்னை, திருவண்ணாமலை மண்டலங்களைச் சேர்ந்த 195 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் ஐந்தாம் கட்ட அறுபடை வீடு ஆன்மிகப் பயணம் திருத்தணியிலிருந்து சுவாமி தரிசனம் செய்து நேற்று காலை பழனிக்கு புறப்பட்டனர். இக்குழுவினர் திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, திருச்செந்தூர் ஆகியவற்றிற்கு சென்று சுவாமி மலையில் ஆன்மிகப் பயணத்தை நிறைவு செய்கின்றனர். இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்கும் மூத்த குடிமக்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளுடன், பயணவழிப் பைகளும் வழங்கப்படுகின்றன. மேலும், அவர்களுக்கு உதவியாக செயல் அலுவலர்கள், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் மருத்துவ குழுவினரும் உடன் செல்கின்றனர்.

அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தில் 5 கட்டப் பயணங்களில் 1,008 மூத்தக் குடிமக்கள் பயன்பெற்றுள்ளனர் என்று இந்து சமய அறநிலையத் துறை தெரிவித்துள்ளது.